நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தமிழகம், புதுவையில் மழை பெய்ய வாய்ப்பு**

First Published : 14 Sep 2011 03:23:11 AM IST

சென்னை, செப்.13: தமிழகத்தில் தென்மேற்கு பருவ மழை தீவிரமடைந்து இருப்பதால் புதன்கிழமை தமிழகம் மற்றும் புதுவையில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகம், புதுவையில் புதன்கிழமை மாலை மற்றும் இரவு நேரங்களில் லேசான மழை பெய்யக்கூடும். சென்னையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும்.

மாலை மற்றும் இரவு நேரங்களில் இடியுடன் கூடிய கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. சென்னையில் பகல் நேர வெப்பநிலை 36 டிகிரி செல்சியசாக இருக்கும்.

**நாமக்கல்லில் வாத்து வளர்ப்பு பயிற்சி நாளை நடக்கிறது**

First Published : 14 Sep 2011 09:16:25 AM IST

நாமக்கல், செப்.13: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வாத்து வளர்ப்பு ஒரு நாள் இலவசப் பயிற்சி வரும் வியாழக்கிழமை (15-ம் தேதி) நடைபெற உள்ளது.

இப் பயிற்சியில் உயர் ரக முட்டையிடும் வாத்து இனங்கள், இறைச்சி வாத்து இனங்கள், வாத்துக்களின் மேலாண்மை, வாத்து குழல் அமைப்பு, உணவிடுதல் மற்றும் பராமரிப்பு முறைகள், நோய்கள் மற்றும் நோய் தடுப்பு முறைகள் ஆகியவை குறித்து விரிவாக பயிற்சி அளிக்கப்படும். மேலும், வாத்து வளர்ப்பில் உள்ள சிறப்பு அம்சங்கள் குறித்து விளக்கப்படும். இந்தப் பயிற்சியில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் உள்பட ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம்.

விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் - மோகனூர் சாலையில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் செயல்படும் வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரில் வந்தோ அல்லது தொலைபேசி மூலமாகவோ புதன்கிழமைக்குள் தங்களது பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். மேலும் விவரங்களுக்கு 04286-266345, 266244, 266650 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

**நீலகிரி, கர்நாடக உருளைக்கிழங்கு வரத்து குறைந்தது: மேட்டுப்பாளையம் மார்க்கெட்டில் கிழங்கு விலை உயர்வு**

First Published : 14 Sep 2011 08:34:35 AM IST

மேட்டுப்பாளையம், செப். 13: மேட்டுப்பாளையம் உருளைக்கிழங்கு மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வரும் நீலகிரி மற்றும் கர்நாடகா பகுதி உருளைக்கிழங்கு வரத்து குறைந்ததால், செவ்வாய்கிழமை நடைபெற்ற ஏலத்தில் கிழங்கு விலையில் உயர்வு காணப்பட்டது.

÷உருளைக்கிழங்கு மார்க்கெட் நிலவரம் குறித்து மேட்டுப்பாளையத்தில் கிழங்கு கமிஷன் மண்டி நடத்திவரும் எஸ்.டி.எம் செல்வராஜ் கூறியது:

÷நீலகிரி மாவட்டம், ஹாசன், திம்பம் உள்ளிட்ட கர்நாடகா மாநிலப் பகுதிகளில் விளையும் உருளைக் கிழங்கிற்கு மொத்த விற்பனை மையமாக மேட்டுப்பாளையம் உருளைக்கிழங்கு மார்க்கெட் உள்ளது.

÷ஜுலையில் தொடங்கி, செப்டம்பர் வரை நீலகிரி பகுதிகளிலிருந்து கார்போக சீசனில் விளையும் கிழங்கும், அக்டோபர் முதல் ஜனவரி வரை விளையும் கடைபோக கிழங்கும் இங்கு விற்பனைக்கு வருகின்றன.

÷நீலகிரி சீசன் இல்லாத காலங்களில், மேட்டுப்பாளையம் மார்க்கெட்டின் தேவையைப் பூர்த்தி செய்ய, கர்நாடகா மட்டுமல்லாது, ஜலந்தர், பரூக்காபாத் உள்ளிட்ட வடமாநில பகுதி கிழங்குகளும் விற்பனைக்கு தருவிக்கப்படுகின்றன.

÷இங்கு ஏலமுறையில் விற்பனையாகும் உருளைக்கிழங்கு, தினமும் தமிழகம் மற்றும் கேரளாவின் அனைத்து பகுதிகளுக்கும் லாரி மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது. தற்போது, நீலகிரி பகுதியில் கார்போக கிழங்கு சீசன் முடியும் தறுவாயில் இருப்பதால், செவ்வாய்கிழமை மேட்டுப்பாளையம் கிழங்கு மார்க்கெட்டிற்கு 40 லோடுகள் வரை மட்டுமே நீலகிரி கிழங்கு விற்பனைக்கு வந்தது.

÷இங்கு 45 கிலோ கொண்ட ஒரு மூட்டை ரூ. 600- 700 வரை விற்றது. இதே கிழங்கு கடந்த வாரம் ரூ. 450-550 வரை மட்டுமே விற்பனையானது. இந்த விலை உயர்வு விவசாயிகளுக்கு மகிழ்ச்சி அளித்துள்ளது.

÷தற்போதைய சூழ்நிலையில், நீலகிரி பகுதி விவசாயிகளுக்கு கிழங்கு உற்பத்தி செய்ய ஏக்கருக்கு ரூ. 60,000 வரை செலவாகிறது. இதை ஈடுசெய்ய 45 கிலோ கொண்ட மூட்டை ரூ. 700-800 வரை விற்றால் தான் இழப்பைத் தவிர்க்க முடியும். அதனால், நீலகிரி பகுதி விவசாயிகள் கிழங்கிற்குப் பதிலாக காரட் பயிரிடவே அதிகம் விரும்புகின்றனர்.

÷இதற்குத் தகுந்தாற்போல், இந்த சீசனில் ஒருகிலோ காரட் ரூ. 13-18 வரையும், அதிகபட்சமாக ரூ. 15-22 வரையும் விற்பனையானதால், விவசாயிகள் உருளைக்கிழங்கில் ஏற்படும் இழப்பை காரட் உற்பத்தி மூலம் சரிசெய்து வருகின்றனர். திம்பம் மற்றும் சுற்றியுள்ள கேர்மாளம்,

உடையார்பாளையம், ஆர்யபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் இந்த சீசனில் பருவமழை குறைந்ததால், கிழங்கு விளைச்சலும் குறைந்துள்ளது. இதனால் திம்பம் பகுதி கிழங்கு அக்டோபர் இறுதிவரையும், ஹாசன் பகுதி கிழங்கு நவம்பர் இறுதி வரையும் விற்பனைக்கு வரும் நிலை உள்ளது. ÷இதனிடையே, நீலகிரி கிழங்கின் 2வது (கடைபோகம்) சீசன் அக்டோபர் இறுதியில் துவங்க உள்ளதாலும், வேறு கிழங்கு வரத்து இல்லாததாலும், அப்போது நீலகிரி கிழங்கின் விலை நிச்சயமாக உயர வாய்ப்புள்ளது என்றார்.

**23-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

First Published : 13 Sep 2011 01:18:59 PM IST

திருவண்ணாமலை, செப். 12: திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 23ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என ஆட்சியர் அன்சுல் மிஸ்ரா தெரிவித்துள்ளார்.

16ஆம் தேதி நடைபெறுவதாக இருந்த இக்கூட்டம், தவிர்க்க முடியாத நிர்வாக காரணங்களால் வரும் 23ஆம் தேதி காலை 11 மணிக்கு ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் என்றும் ஆட்சியர் கூறியுள்ளார்.

தினமலர்

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 14,2011,00:00 IST








**புதிய உளுந்து ரகம் "வம்பன் 6'**: தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் சமீபத்தில் வெளியிட்டுள்ள இந்த ரகத்தின் வயது 65-70 நாட்கள். மகசூல் ஒரு எக்டருக்கு இறவையில் 890 கிலோ. மானாவாரியில் 850 கிலோ. அதிகபட்சம் 1525 கிலோ. சராசரி மகசூல் 871 கிலோ. வம்பன் 1 ரகத்தைவிட 15.8 சதம் கூடுதல் மகசூல்.

**பருவம்:** ஆடி, புரட்டாசி மற்றும் தை. பயிரிட உகந்த பகுதிகள்: கன்னியாகுமரி, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக தமிழகம் முழுவதும்.

**சிறப்பியல்புகள்:** சரியாத, உதிராத ஒருசேர பூக்கும் திறன், மஞ்சள் தேமல் நோய் மற்றும் சாம்பல் நோய்க்கு எதிர்ப்புத்திறன் கொண்டது. மானாவாரி மற்றும் இறவைக்கு ஏற்றது. 21.1 சதம் புரதச்சத்து கொண்டது.

**வீரிய ஒட்டு சோளம் கோ-5**: தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் சமீபத்தில் வெளியிட்டுள்ள மற்றுமொரு வீரிய ஒட்டு ரகம் இது. ஐ.சி.எஸ்.ஏ.51, டி.என்.எஸ்.30 ஆகிய ரகங்களிலிருந்து தேர்வு செய்து உருவாக்கப்பட்டது. இதன் வயது 95-100 நாட்கள்.

**மகசூல்**: மானாவாரியில் ஒரு எக்டருக்கு குறைந்தபட்சம் 2759 கிலோ. அதிகபட்சம் 5060 கிலோ தானியமும், குறைந்தபட்சம் 7563 கிலோ, அதிகபட்சம் 9680 கிலோ உலர் தட்டையும் கொடுக்கவல்லது.

இறவையில் ஒரு எக்டருக்கு குறைந்தபட்சம் 4338 கிலோ, அதிகபட்சம் 6528 கிலோ தானியமும், குறைந்தபட்சம் 10,548 கிலோ, அதிகபட்சம் 13,470 கிலோ உலர்தட்டையும் கொடுக்கவல்லது. எம்.எஸ்.எச்.51 ரகத்தைவிட கூடுதல் விளைச்சல்.

**பயிரிட உகந்த பருவம்**: ஆடி, புரட்டாசி மற்றும் தை.

**பயிரிட உகந்த பகுதிகள்**: சோளம் விளையும் அனைத்து பகுதிகளும்.

**சிறப்பியல்புகள்:** தானியம் மற்றும் தீவனத்துக்கேற்ற ஒட்டுரகம், குறைந்த வயது, சாயாத தன்மை, அதிக செரிமானத்தன்மை கொண்ட தட்டை, சற்றே விரிந்த கதிர்களுடன் வெண்முத்து தானியங்கள், குறைந்த ஈ மற்றும் கதிர் பூசன நோய்க்கு மிதமான எதிர்ப்புத்தன்மை கொண்டது.

**வீரிய ஒட்டு கம்பு கோ-9**: தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் சென்ற மாதம் (ஆகஸ்ட் 22, 2011) வெளியிட்டுள்ள இந்த வீரிய ஒட்டு ரகம், மகசூலாக இறவையில் ஒரு எக்டருக்கு குறைந்தபட்சம் 3728 கிலோ, அதிகபட்சம் 4,950 கிலோ, மானாவாரியில் ஒரு எக்டருக்கு குறைந்த பட்சம் 2707 கிலோ, அதிகபட்சம் 4950 கிலோ கொடுக்கவல்லது. எக்ஸ் 7 மற்றும் என்.எச்.7 ரகங்களைவிட 19 சதம் கூடுதல் விளைச்சல்.

**பயிரிட உகந்த பருவம்**: இறவைக்கு சித்திரை, மாசி ஆகிய பட்டங்கள். மானாவாரிக்கு ஆடி, புரட்டாசி ஆகிய பட்டங்கள். ஐ.சி.எம்.ஏ. 93111ஏ, பி.டி. 6029-30 ஆகிய ரகங்களிலிருந்து தேர்வு செய்து உருவாக்கப்பட்டது.

**பயிரிட உகந்த பகுதிகள்**: கம்பு விளையும் அனைத்து பகுதிகளும்.

**சிறப்பியல்புகள்**: அதிக விளைச்சல், சராசரியாக 4-6 தூர்கள், அடர்த்தியான கதிர் மற்றும் பெரிய தானியங்கள், அதிக இரும்புச்சத்து, அடிச்சாம்பல் மற்றும் துரு நோய்களுக்கு அதிக எதிர்ப்புத்திறன் கொண்டது.

**கவனிக்க**: புதிதாக வெளியிட்டுள்ளதை வாங்க விரும்பும் விவசாயிகள் வேளாண்மை பல்கலைக் கழகத்தை தொடர்புகொள்ளவும். **தொடர்புக்கு**: ஆராய்ச்சி இயக்ககம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003. போன்: 0422-243 1222.-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**நிலத்தை சமன்படுத்த லேசர் லெவலர்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 14,2011,00:00 IST



பண்ணை நிலங்களை நுட்பமாகவும், துல்லியமாகவும் சமப்படுத்துவதற்காக லேசர் ஸ்டார் என்னும் டிராக்டரில் இயங்கி லேசர் வழிகாட்டுதலில் நிலத்தைச் சமன்செய்யும் உபகரணம்

உள்ளது. அது அதிகபட்சம் 30% வரை பாசன நீர்த்தேவையை குறைக்கிறது. களத்தைச் சமப்படுத்தும் நேரத்தேவையைக் குறைத்து பண்ணையின் உற்பத்தித் திறனை மேம்படுத்துகிறது.

**லேசர் உபயோகித்து நிலத்தை சமப்படுத்துவதன் பலன்கள்**

* பயிர்களின் உற்பத்தித் திறன் மற்றும் தரத்தை மேம்படுத்துகிறது.
* நிலத்தைச் சமப்படுத்துவதற்காகத் தேவைப்படும் நேரத்தைக் குறைக்கிறது.
* முழுப்பண்ணை நிலத்திற்கும் நீர் சம அளவில் விநியோகம்.
* பயிர்களின் வளர்ச்சி சீராக அமையும்.
* அதிகபட்சம் 30% வரை நீர்த்தேவையைக் குறைத்து நீர் ஆதாரத்தைத் திறம்பட உபயோகிக்கச் செய்கிறது.
* களைகளின் பிரச்னையைக் குறைக்கிறது.

**பயன்பாடுகள்**

* பண்ணை நிலம்
* சாலை மற்றும் வடிகால் வசதி சிறப்பம்சங்கள்
* 3 சமப்படுத்தும் தேர்வுகளுடன் கிடைக்கிறது.
* ஒற்றை அச்சு சரிவு கட்டுப்பாடு
* நிலத்தைச் சமப்படுத்துவது
* இரட்டை அச்சு சரிவு கட்டுப்பாடு

**செயல்பாட்டு தூரம்**

* 600 மீ. வட்டம் (சமநிலம்)
* 900 மீ. விட்டம் (ஒற்றை சரிவு)
* 1200 மீட்டர்கள் விட்டம் (இரட்டை சரிவு)
* துல்லியத்தன்மை 1/8" இயக்கி
* 45 எச்.பி. அல்லது அதற்கும் அதிகம் எச்.பி. உள்ள டிராக்டர் கொண்டு? இயக்கலாம்.
* டிராக்டர் ஹைட்ராலிக் பவர் மூலம் இயங்குகிறது.
* லேசர் லெவலரை டிராக்டருடன் இணைப்பது மற்றும் வேலை துவங்க தயார் செய்வது மிகவும் எளிது.
* வலுவான, அதிர்ச்சியைத் தாங்கும் வகையில் கட்டுமான அமைப்பு.
* நம்பிக்கையான சிக்கலில்லாத இயக்கம்

தொடர்பு: ஹரிகிருஷ்ணன், கோயம்புத்தூர். 93448 36456, 98430 67456, 93448 36456, 95009

96456.

-கே.சத்தியபிரபா, உடுமலை.

**வேளாண் உற்பத்தியை அதிகரிக்க கூடப்பாக்கம் வேங்கடபதி யோசனை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 14,2011,00:00 IST

வேளாண் சாகுபடியில் பயிர்களுக்கு ஏற்ப ஆர்த்தோ பாஸ்பரிக் அமிலத்தின் சதவீதத்தை குறைத்தும் அதிகரித்தும் பயன்படுத்துவதன் மூலம் அதிக மகசூல் பெறலாம் என கூடப்பாக்கம் வேங்கடபதி ஆய்வு மூலம் கண்டறிந்துள்ளார்.

வேளாண் பயிர்கள் வளர்ச்சிக்கு நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் மிக அவசியம். பாஸ்பரஸ் என்ற மணிச்சத்து, பயிர்களின் வேர்களை அதிகரிக்க உதவும். சூப்பர் பாஸ்பேட் வயலில் இடும்போது முழுமையாக கரைவதில்லை. 50 சதவீதம் கரைந்த நிலையில் இதை பயிர்கள் எடுத்துக்கொள்ள பல இடையூறு ஏற்படுகிறது. இதனால் மகசூல் குறையும்.

குறிப்பிட்ட பயிர்களுக்கு பாஸ்பரஸ் அதிக அளவில் தேவைப்படும். இத்தகைய பயிர்களுக்கு ஏற்ற மணிச்சத்து உரங்கள் மார்க்கெட்டில் கிடைப்பதில்லை. மணிச்சத்து உரம் தயாரிக்க, ஆர்த்தோ பாஸ்பரிக் அமிலம் மூலப் பொருளாகப் பயன்படுகிறது. இத்திரவத்தை செடிகளுக்கு ஏற்ப குறைத்தும் அதிகரித்தும் தண்ணீருடன் கலந்து வேர்பகுதியில் செலுத்தினால் தேவையான மணிச்சத்து கிடைத்து, அதிக வேர்கள் உருவாகி, செடிகள் ஆரோக்கியமாக வளர்ந்து அதிக மகசூலைத் தரும்.

இந்த முறையை சவுக்கு, வாழை பயிர்களில் சோதித்துப் பார்த்ததில் வேர்கள் அதிகளவில் ஊடுருவி, தேவையான சத்துக்களை எடுத்துக் கொண்டன. சவுக்கு வளர்ப்பில் பரிசோதனை செய்ததில், ஒரு சவுக்கு மரத்தின் எடை 3 ஆண்டுகளில் 80 கிலோ, 50 அடி உயரம், 20 அங்குலம் சுற்றளவு கொண்டதாக வளர்ந்தது. மேலும் சில பயிர்களில் இம்முறையைப் பயன்படுத்தி சோதித்துப் பார்த்ததில் நல்ல பலன் கிடைத்துள்ளது. ஆர்த்தோ பாஸ்பரிக் அமிலம் பயன்படுத்துவதால் நோய் தடுப்பு மருந்தாகவும் செயல்படுகிறது.-வேங்கடபதி, கூடப்பாக்கம்.

**மாங்காய் விளைச்சலை அதிகரிக்க இலக்கு**

செப்டம்பர் 14,2011,09:17



ராமநாதபுரம் :தேசிய தோட்டக்கலை இயக்கம் மூலம் அடர் நடவு முறையில் மாங்கன்றுகள் நடப்பட்டு வருகின்றன. இவை தோட்டக்கலைத்துறை மூலம் விவசாயிகளுக்கு, இலவசமாக வழங்கப்படுகிறது. ஐந்து மீட்டருக்கு ஒரு கன்று வீதம், ஒரு எக்டேரில் 400 கன்றுகள் நடப்படும். எக்டேருக்கு 24 ஆயிரம் ரூபாய் மானியமாக அரசு வழங்குகிறது.கடந்த முறை பயிரிட்ட பரப்பை காட்டிலும், இந்த முறை மூன்று மடங்கு விளைச்சலை பெருக்க, வேளாண் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது. மா விவசாயிகள் வெளி மாவட்டங்கள், வெளி மாநிலங்களுக்கு அழைத்து செல்லப்பட்டு அங்குள்ள நடவு முறை குறித்து விளக்கப்படும்.

**நிலக்கடலை பயிருக்கு ஏற்ற சீதோஷண நிலை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 14,2011,00:21 IST

கிருஷ்ணகிரி : கிருஷ்ணகிரி மாவட்டத்தில், விட்டு விட்டு பெய்து வரும் மழையால், நிலக்கடலை பயிர் நல்ல முறையில் வளர்ந்து வருகிறது. இந்த ஆண்டு விளைச்சல் நன்றாக இருப்பதால், நிலக்கடலை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். விவசாயத்தை பிரதானமாக கொண்ட கிருஷ்ணகிரி மாவட்டத்தில், மேட்டுப்பாங்கான நிலத்தில் ஆண்டுதோறும் நிலக்கடலை சாகுபடி செய்யப்படுகிறது. எண்ணெய் வித்து பயிர்களில் முதல் இடம் வகிக்கும் நிலக்கடலை சாகுபடியில் விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைத்து வரும் நிலையில், ஆண்டுக்கு ஆண்டு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நிலக்கடலை சாகுபடி அதிகரித்து வருகிறது. கடந்தாண்டு

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 22 ஆயிரம் ஹெக்டேரில் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டது. இந்தாண்டு நிலக்கடலை சாகுபடி, 8 ஆயிரம் ஹெக்டேர் அதிகரித்து மொத்தம், 30 ஆயிரம் ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பொதுவாக வைகாசி மற்றும் ஆடி மாதங்கள் வரை நிலக்கடலை விதைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும். ஐப்பசி மாதம் அறுவடை துவங்கும். வைகாசி மற்றும் ஆடி மாதங்களில் மாவட்டத்தில் பெய்த மழையை கொண்டு விவாசாயிகள் நிலக்கடலை விதைப்பு மேற்கொண்டனர். தற்போது, 45 நாட்கள் ஆன நிலையில் விவசாயிகள் நிலக்கடலையில் களைகள் எடுத்து ஜிப்சம் இட்டுள்ளனர் . கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதும் அவ்வப்போது விட்டு விட்டு நல்ல மழை பெய்து வருகிறது. பொதுவாக நிலக்கடலை பயிர் வாடிய பின்பு மழை வந்தால் விளைச்சல் நன்றாக இருக்கும். இதன்படி கிருஷ்ணகிரி சுற்றுவட்டார பகுதியில் விட்டு விட்டு மழை பெய்து வருதால் நிலக்கடலை செடிகள் நல்ல முறையில் வளர்ந்து வருகிறது. நிலக்கடலை விளைச்சல் அதிகரித்து நல்ல லாபம் கிடைக்கும் என்பதால் நிலக்கடலை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**கொள்முதல் நிலையங்களில் 1,000 டன் நெல் தேக்கம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 14,2011,01:10 IST

கோபிசெட்டிபாளையம் : கோபி பகுதியில் உள்ள நெல் கொள்முதல் நிலையங்களில், நெல் பதர் பிரிப்பதில் தாமதம் ஏற்படுவதால், 1,000 டன் நெல் தேக்கமடைந்துள்ளது.தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனப் பகுதிக்குட்பட்ட பொலவகாளிபாளையம், நஞ்சகவுண்டன்பாளையம், புதுவள்ளியாம்பாளையம், டி.என்.பாளையம், காசிபாளையம், அத்தாணி, புதுக்கரைபுதூர், கள்ளிப்பட்டி, கூகலூர் ஆகிய ஒன்பது இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. சன்ன ரகத்துக்கு கிலோ 11 ரூபாய், குண்டு ரகத்துக்கு 10.50 ரூபாய் வழங்கப்படுகிறது.நடப்பாண்டு கர்நாடகா, ஆந்திரா, கேரளா ஆகிய பகுதியை சேர்ந்த வெளிமாநில வியாபாரிகள் நெல் கொள்முதல் செய்ய வரவில்லை. இதனால், அரசு கொள்முதல் நிலையங்களுக்கு அதிகளவில் நெல் மூட்டைகள் வரத்தாகிறது.விவசாயிகள் கொண்டு வரும் நெல் முழுவதும், கொள்முதல் நிலையத்தில் உள்ள, "வினோயிங் மிஷின்' மூலம் பதர் நீக்கப்பட்ட பிறகே, கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால், கொள்முதல் தாமதமாகிறது.கொள்முதல் நிலையங்களில் பல நாட்கள் வரை நெல் மூட்டைகள் வைத்துள்ளனர். நெல் அறுவடைப் பணி தீவிரம் அடைந்துள்ளதால், கொள்முதல் நிலையங்களுக்கு நெல் வரத்து அதிகரித்துள்ளது. ஆனால், நெல் மூட்டைகள் வைக்க போதிய இட வசதி இல்லாததால் அதிகாரிகள் திணறி வருகின்றனர்.கொள்முதல் நிலையகளுக்கு வந்த நெல் மூட்டைகளை ஆங்காங்கே அடுக்கி வைத்து தார்ப்பாய் மூலம் மூடப்பட்டுள்ளது. உடனடியாக, கொள்முதல் செய்யாததால், விவசாயிகள் தினசரி கொள்முதல் நிலையத்துக்கு வந்து செல்ல வேண்டியுள்ளது.சென்ற 12 நாட்களில், கூகலூர்

நெல் கொள்முதல் நிலையத்தில் 117.8 டன், நஞ்சகவுண்டன்பாளையம் 82.12 டன், பொலவகாளிபாளையம் 64.68 டன், டி.என்.பாளையம் 145.08 டன், கள்ளிபட்டி 59.92 டன், காசிபாளையம் 75.16 டன், புதுவள்ளியாம்பாளையம் 107.48 டன், புதுக்கரைபுதூர்(ஏழுர்) 83.32 டன், அத்தாணி 74.84 டன் என மொத்தம் 810 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், 1,000 டன் வரை பதர் நீக்குவதற்காக கொள்முதல் நிலையங்களில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. உடனடியாக பணம் பெற முடியாமல் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.விவசாயிகள் கூறியதாவது:ஐந்து நாட்களுக்கு முன் கொண்டு வந்த நெல் மூட்டைகள் கூட விற்பனையாகாமல் காத்திருப்பில் உள்ளது. சீனியாரிட்டி படி எங்கள் நெல் கொள்முதல் செய்யப்படும். நெல் மூட்டைகளில் பதர் அதிகளவில் உள்ளது என, "வினோயிங் மிஷின்' மூலம் பதர் நீக்கப்படுகிறது.ஒரு மூட்டை நெல் பதர் நீக்க ஏழு ரூபாய், கூலியாட்களுக்கு தனியாக ஐந்து ரூபாய் தர வேண்டியுள்ளது. ஒரு மூட்டை நெல் பதர் நீக்க மூன்று நிமிடமாகிறது. ஒரு நாளைக்கு 700 மூட்டை வரைதான் பதர் நீக்க முடியும். விவசாயிகள் கொண்டு வந்த நெல்லை உடன் விற்க முடியாத நிலை உள்ளது. ஒவ்வொரு நிலையத்திலும் குறைந்தபட்சம் 100 டன் நெல் தேக்கமடைந்துள்ளது.கொள்முதல் நிலையங்களில் கூடுதலாக, "வினோயிங் மிஷின்' வைத்து, பதர் நீக்க நடவடிக்கை எடுத்தால், தேக்கமடைந்துள்ள நெல் மூட்டைகளை உடனடியாக விற்க வசதியாக இருக்கும்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

**மானிய விலையில் பொட்டாஷ்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 14,2011,00:53 IST

பொங்கலூர்:"பி.ஏ.பி., பாசன வசதி பெறும் பகுதிகளில் விவசாயிகளுக்கு மானிய விலையில் பொட்டாஷ் வழங்க வேண்டும்,' என மா.கம்யூ., தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.மா.கம்யூ., கிளை மாநாடு, கண்டியன்கோவிலில் நடந்தது. ஒன்றியக்குழு உறுப்பினர் பாலசுப்ரமணி தலைமை வகித்தார். "கருங்காளிபாளையம் பஸ் வழித்தடத்துக்கு தார் ரோடு போட வேண்டும். வெங்காயம் இருப்பு வைக்கும் விவசாயிகளுக்கு அரசு நிதியுதவி செய்ய வேண்டும். தற்போது, பி.ஏ.பி., பாசன வசதி பெறும் விவசாயிகளுக்கு மானிய விலையில் பொட்டாஷ் வழங்க வேண்டும்,' என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.புதிய செயலாளராக கிருஷ்ணமூர்த்தி தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒன்றிய செயலாளர் லோகநாதன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**மா விளைச்சலை 3 மடங்கு அதிகரிக்க இலக்கு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 13,2011,22:20 IST

ராமநாதபுரம் : அடர் நடவு முறையில் மாங்கன்றுகள் நட்டு, கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு மூன்று மடங்கு விளைச்சல் விளைவிக்க, வேளாண் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. தேசிய தோட்டக்கலை இயக்கம் மூலம் அடர் நடவு முறையில் மாங்கன்றுகள் நடப்பட்டு வருகின்றன. இவை தோட்டக்கலைத்துறை மூலம் விவசாயிகளுக்கு, இலவசமாக வழங்கப்படுகிறது. ஐந்து மீட்டருக்கு ஒரு கன்று வீதம், ஒரு எக்டேரில் 400 கன்றுகள் நடப்படும். எக்டேருக்கு 24 ஆயிரம் ரூபாய் மானியமாக அரசு வழங்குகிறது.கடந்த முறை பயிரிட்ட பரப்பை காட்டிலும், இந்த முறை மூன்று மடங்கு விளைச்சலை பெருக்க, வேளாண் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது. இதுதொடர்பாக மா விவசாயிகள் வெளி மாவட்டங்கள், வெளி மாநிலங்களுக்கு அழைத்து செல்லப்பட உள்ளனர். அங்குள்ள நடவு முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்படும்.

**விவசாயிகளுக்கு வேளாண் கிடங்கு வசதி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 13,2011,22:15 IST

சிங்கம்புணரி : சிங்கம்புணரி ஒன்றியம் அ.காளாப்பூர்,எம். கோவில்பட்டியில் விவசாயிகள் வேளாண் விளை பொருட்களை சேமித்து வைக்க சேமிப்பு கிடங்கு வசதி உள்ளது. சுற்று வட்டார கிராமங்களை சேர்ந்தவிவசாயிகள் அறுவடை காலத்தில் விளை பொருட்களான நெல், கடலை,சோளம், பயறு வகைகளை கொண்டு வந்து உலர் களத்தில் காய வைத்து சேமித்து வைக்கலாம். விலை உயரும் காலத்தில் எடுத்து விற்பனை செய்து லாபம் பெற முடியும்.விவசாயிகள் இந்த வசதியை பயன்படுத்திக்கொள்ளுமாறுவேளாண்மை வணிகத்துறை துணை இயக்குனர் சந்திரன் தெரிவித்துள்ளார்.